08.04.2026 Mcop 433/2021 ம.சா 1 கணேசன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தானது 2021 ம் ஆண்டு நடந்தது என்றால் சரிதான். 2021 ம் ஆண்டு எனக்கு வயது 17 ஆகும். நான் இளவராக இருக்கும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் காரில் தென்காசியில் இருந்து அம்பாசமுத்திரம் சென்றேன். அந்த காரை நான் ஒட்டினேன் என்றால் இல்லை. ஆறுமுகச்சாமி என்பவர் ஒட்டினார். ஆறுமுகச்சாமி எனக்கு உறவினர் ஆவார். அந்த காரின் உரிமையாளரும் ஆறுமுகச்சாமி தான். என் மீது தான் விபத்து சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது தவறு என்றும், என் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். குற்ற இறுதியறிக்கையும் என் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் காரை ஒட்டி சென்றேன் என்றும், காரில் அப்போது வேறு யாரும் பயணம் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மனுவில் ஆறுமுகச்சாமியை 3 ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். 3 ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டுள்ள ஆறுமுகச்சாமி உரிமையாளர் என்ற முறையில் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளார் என்றும், விபத்தின் போது அவர் காரை இயக்கியதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2024 ம் ஆண்டில் ஒரு இடைக்கால மனு எண். 3/2024 மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனுவில் உள்ள கைரேகை என்னுடையது என்றால் சரிதான். அந்த இடைகால மனுவில் ஆறுமுகச்சாமி வாகனத்தை இயக்கியதாகவும் அவரை தரப்பினராக சேர்க்க வேண்டும் என மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த மனு

இருதரப்பிலும் விசாரணை செய்யப்பட்டு 6.2.2025ம் தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து நடந்த இடம் ஆற்றுபாலத்திற்கு முன்னால் உள்ள வளைவு பகுதி என்றால் சரிதான். அந்த சாலையானது இரண்டு வாகனங்கள் சாதாரணமாக சென்று வரக்கூடிய இடம் என்றால் சரிதான். நான் இடது ஓரமாக தென்காசியில் இருந்து அம்பாசமுத்திரம் சென்றேன். என்னிடம் காண்பிக்கப்பட்ட மாதிரிவரைபடத்தில் பெருக்கல் குறியீட்டு இடத்தில் விபத்து நடந்தது என்றால் சரிதான். நான் வலதுபுறமாக சென்று பேரூந்தின் முன்பக்கம் நான் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. நின்று கொண்டிருந்த கார் மீது பேரூந்து வந்து இடித்தது. என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் பேரூந்து மோதி கிழக்குபக்கமாக பள்ளத்தில் தூக்கி எறியப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மாதிரி வரைபடத்தில் மேற்கு பக்கமாக விபத்து நடந்ததாக குறியீட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆறுமுகச்சாமியின் ஒட்டுனர் உரிமத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நான்கு சக்கர வாகனத்தை இயக்குவதற்கு தகுதியற்ற நபர் என்றும், நான் தான் காரை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாக ஒட்டிசென்று முழுவதுமாக வலதுபுறம் வந்து அரசு பேரூந்து மோதி தனக்கு தானே விபத்து ஏற்படுத்தி கொண்டு இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

(ஒம்) எஸ். முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி (முழு பொ)
தென்காசி.